1974 சனவரி 28]

திரு. த.சோணையா : தலைவரவர்களே, கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து வருமானத்தை வைத்து, எங்கேயாவது கடன் வாங்கி அந்தக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றலாம் என்று பார்த்தால் பஞ்சாயத்துக்களின் வருமானம் குறைவாக இருக்கிறது. அதனால் அதைச் சமாளிக்க சிரமமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கமே முழுப் பொறுப்பு எடுத்து குடிநீர் வழங்குவதற்காவது ஆவன செய்யயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நிதி வசதி பெருகுவதற்கான வாயில்கள் காணப்பட்டால், அந்த வசதிகளை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களைப் பரவலாக நிறைவேற்ற முடியும்.

கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களது ஊதியம்

*190 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில், நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக உள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் தரப்பட்டவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

கள்ளர் சீரமைப்புபின் கீழ் இயங்கிவரும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணி புரியும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதம் ஆகஸ்டு 1973-லிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கடல் அரிப்புத் தடுப்பு நடவடிக்கைகள்

*191 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனுஷ்கோடிப் பகுதியில் மிகுதியிருக்கும் கரையைச் சிறுக சிறுக கடல் அரிப்பதைத் தடுப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனுஷ்கோடி பகுதியில் கடல் அரிப்பு தடுப்பு நடவடிக்கைகள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டி விரிவாக ஆய்வு நடத்துகிற சிறப்புப் பணியாளர்களை நியமிக்க ஒப்புதல் அளிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளன.